## தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
## திருப்பூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
## (18.05.2016 முதல் 22.05.2016)

**அறிக்கைஎண் :040/2016** **தேதி:17.05.2016**

**மாநிலத்தின் கடந்தவார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 30°செ முதல் 40°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 24°செ முதல் 30°செ ஆகவும் பதிவானது. கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 19°செ முதல் 24°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை12°செ முதல் 14°செ ஆகவும் பதிவானது. தமிழ்நாட்டில் பொதுவாக ஒரு சில இடங்களில் கன மழை காணப்பட்டது...

**எதிர்பார்க்கப்படும் வானிலை:திருப்பூர் (18.05.2016 முதல் 22.05.2016)**

வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். தொடர்ந்து நான்கு நாட்களுக்கு கன மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 26°செ முதல் 27°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 24 °செ முதல் 25°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 88 முதல் 90 சதவிகிதமாகவும், மாலைநேரகாற்றின் ஈரப்பதம் 84 முதல் 88 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 10 முதல் 14 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

| தேதி | மழை (மி.மீ) | அதிகபட்ச வெப்ப நிலை (°செ) | குறைந்த பட்ச வெப்ப நிலை (°செ) | மேக மூட்டம் (ஆக்டா) | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | காற்றின் வேகம் (கி.மீ/ மணி) | காற்று வரும் திசை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 18.05.16 | 45 | 26 | 24 | 8 | 90 | 88 | 11 | தென்மேற்கு |
| 19.05.16 | 30 | 26 | 24 | 8 | 90 | 88 | 10 | தென்மேற்கு |
| 20.05.16 | 30 | 26 | 24 | 8 | 90 | 88 | 13 | தென்மேற்கு |
| 22.05.16 | 10 | 27 | 25 | 7 | 88 | 84 | 14 | தென்மேற்கு |
| 23.05.16 | 0 | 27 | 25 | 7 | 88 | 84 | 13 | தென்மேற்கு |

**வேளாண் அறிவுரை**

- ✓ வரும் நான்கு நாட்களுக்கு தொடர்ச்சியான கனமழை எதிர்பார்க்கப்படுவதால் மக்காச்சோளம், சோளம் மற்றும் கம்பு பயிர்களுக்கு தகுந்த வடிகால் வசதி செய்யவும்.
- ✓ வரும் நான்கு நாட்களுக்கு தொடர்ச்சியான கனமழை எதிர்பார்க்கப்படுவதால் சமீபத்தில் நடவு செய்யப்பட்ட மஞ்சள் பயிருக்கு தகுந்த வடிகால் வசதி செய்து கிழங்கு அழுகலை தவிர்க்கவும்.
- ✓ கனமழையும் அதிவேகக் காற்றும் எதிர்பார்க்கப்படுவதால் 5 மாதத்திற்கு மேலான வாழை மற்றும் கரும்பு பயிர்களுக்கு முட்டுக் கொடுக்கவும்.
- ✓ எதிர்பார்க்கப்படும் மழையினை சேமிக்கும் வகையில் தென்னை மரத்தை சுற்றி ஒரு மீட்டர் தூரத்திற்கு வட்டப்பாத்தி எடுக்கவும்.
- ✓ இடியுடன் கூடிய மழை எதிர்பார்க்கப்படுவதால் கால்நடைகளை மேய்ச்சலுக்கு அனுப்ப வேண்டாம்.
- ✓ எதிர்பார்க்கப்படும் கனமழையின் அதிகப்படியான நீரினை தகுந்த வடிகால் வசதி ஏற்படுத்தி பண்ணைக்குட்டையில் நீரை சேமிக்கவும்.

**குறுஞ்செய்தி**

- ✓ எதிர்பார்க்கப்படும் கனமழையின் அதிகப்படியான நீரினை தகுந்த வடிகால் வசதி ஏற்படுத்தி பண்ணைக்குட்டையில் நீரை சேமிக்கவும்.

**பேராசிரியர் மற்றும் தலைவர்**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை.**